**O.S.No.22/2014**

**Date:05/08/2019**

**வா.சா-1 திரு.அசோகன், த-பெ.கருப்பையா**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா 4வது இலக்கச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. அந்த சொத்து என் அனுபவத்தில் கடந்த 80 வருடமாக இல்லை என்றால் சரிதான். எனது முன்னோர்களின் அனுபவத்திலும் கிடையாது என்றால் என் தாத்தா அனுபவத்தில் இருந்தது. 80 வருடமாக என் குடும்பத்தினர் எவரும் தாவா 4வது இலக்கச் சொத்தை அனுபவித்தது இல்லை என்றால் சரிதான். தாவா 4வது இலக்கச் சொத்தின் சர்வே எண்ணும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தாவா 4வது இலக்கச் சொத்திற்கு பட்டாவும், கடந்த 80 வருடமாக என் குடும்பத்தினர் பெயரில் இல்லை என்றால் சரிதான். தாவா 4வது இலக்கச் சொத்தின் பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் ரவீந்திரன் பெயரில் உள்ளது. 12ம் பிரதிவாதி ரவீந்திரனுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் ரவீந்திரனின் அப்பா அவருக்கு அந்த சொத்தை எழுதி வைத்தார். நான் சொல்லும் உயில் யார் எழுதி வைத்தது என்றால் 1934ல் என் அப்பாவை பெற்ற தாத்தா வீரணன் என்பவர் எழுதி வைத்துள்ளார், அவர் நீதிமன்றத்தில் பணிபுரிந்தார். 20.11.1934ல் வா.சா.ஆ.1 உயில் என் தாத்தா எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா 4வது இலக்கச் சொத்து என் தாத்தாவிற்கு பூர்வீகச் சொத்து என்றால் சரிதான். அதே தேதியில் 20.11.1934ல் உயில் எழுதி வைத்த தேதியில் என் தாத்தா தாவா 4வது இலக்கச் சொத்தை வாசுதேவன் செட்டியாருக்கு அடமானம் வைத்துள்ளார் என்றால் தெரியாது. தாவா 4வது இலக்கச் சொத்தானது பூர்வீகச் சொத்து என்றாலும், என் தாத்தாவிற்கு தனித்துப் பாத்தியப்பட்ட சொத்து கிடையாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் எழுதப்பட்ட தேதியில் என் தகப்பனார் கருப்பையா உயிரோடு இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும் உயில் எழுதிய பூர்வீகச் சொத்தில் பாத்தியதை உண்டு என்றால் சரிதான். என் தாத்தா தாவா 4வது இலக்கச் சொத்தை வாசுதேவன் செட்டியாரிடம் அடமானம் வைத்து, கடன் வாங்கிக் கொண்டு, அந்த கடனை திருப்பிச் செலுத்தாமல் 08.01.1935ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அதன் பின்னர், என் அப்பா கருப்பையாவும், என் தாயார் கருப்பாயியும், தாவா 4வது இலக்கச் சொத்தை 27.02.1937ல் வாசுதேவன் செட்டியாருக்கு கிரையம் எழுதிக் கொடுத்து விட்டனர் என்றால் சரிதான். அதன் பின்னர் வாசுதேவன் செட்டியார் சுப்பையா அம்பலம் அவர்களுக்கு தாவா 4வது இலக்கச் சொத்தை 16.09.1942ல் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்து குறித்து சுப்பையா அம்பலம் மற்றும் கண்ணுச்சாமி அம்பலம் 16.09.1959ல் ஒரு பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் தெரியாது. அதன் பின்னர் பழனி என்பவருடன் 16.09.1959ல் பரிவர்த்தனை செய்தது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அந்த பழனி என்பவர் 31.08.1964ல் 12ம் பிரதிவாதி ரவீந்திரனின் அப்பா ராமலிங்கம் என்பவருக்கு கிரயம்

**O.S.No.22/2014, Date:05/08/2019**

**வா.சா-1 திரு.அசோகன், த-பெ.கருப்பையா**

**12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கொடுத்த, அவர்கள் தாவா 4வது இலக்கச் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா 4வது இலக்கச் சொத்து ரவீந்திரனின் பெயரில் உள்ள விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் தாத்தா சொத்தில் சிலர் பிரச்சனை செய்த போது, அந்த இடத்தை அளந்து பார்க்க நாங்கள் முயன்ற போது, ரவீந்திரனின் பெயரில் தாவா 4வது இலக்கச் சொத்து இருந்தது எங்களுக்கு தெரிய வந்தது. தாவா 4வது இலக்கச் சொத்து ரவீந்திரனின் பெயரில் இருப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ரவீந்திரன் பெயரில் தாவா 4வது இலக்கச் சொத்து இருப்பதைக் காட்டும் ஆவணம் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ரவீந்திரன் இந்த வழக்கிற்கு தேவையான தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கு பாத்தியஸ்தரான ரவீந்திரனின் தகப்பனார் ராமலிங்கத்தை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். செல்வகுமார் யார் என்றால 12ம் பிரதிவாதியின் தம்பி ஆவார். அவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். செல்வகுமார் இறந்து விட்டதாக தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு திரும்பி வந்தது என்றால் சரிதான். ஆனால் இறந்து போன செல்வகுமார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், செல்வகுமார் இறந்த விபரம் பின்னர்தான் எனக்கு தெரிய வந்தது. செல்வகுமாரின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா 4வது இலக்கச் சொத்தைப் பொறுத்து வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தை எழுதி வைப்பதற்கு என் தாத்தாவிற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின்படி எதுவும் நடைமுறையில் இல்லை என்றாலும், அனைத்து சொத்துக்களையும் விற்று விட்டார்கள் என்றால் என் தாத்தாவின் சமாதி மற்றும் என் தாத்தா வாழ்ந்த பழைய வீட்டையும் தவிர்த்து வேறு சொத்துக்களை உயில் படி நடைமுறைப்படுத்திக் கொள்ளவில்லை. என் தகப்பனார் மற்றும் என் தாயார் எந்த காலத்திலாவது இந்த தாவாச் சொத்துக்கள் டிரஸ்ட் சொத்துக்கள் என்று ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கானது பணம் பறிக்கும் நோக்கத்துடன் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.